O,1C5:21

பேராசிரியர் சி. இலக்குவனார்
எம். ஏ., எம். ஓ. எல்.

எழுதியவை

| | |
|---|---|
| மாமூலனார் காதற் காட்சிகள் | 2 0 |
| எல்லோரும் இந்நாட்டு மன்னர் I | 1 8 |
| ,, ,, II | 1 8 |
| அமைச்சர் யார்? | 1 4 |

அறநெறி பப்ளிகேஷன்ஸ்
தியாகராய நகரம் : : சென்னை-17

PREMA ART PRINTERS, MADRAS-24.

திருக்குறள் விளக்கம்

# அமைச்சர் யார்?

சி. இலக்குவனார்

...ா பப்ளிகேஷன்ஸ்
சென்னை-17

நீலா பப்ளிகேஷன்ஸ் வெளியீடு, 2.

# அமைச்சர் யார்?

(அமைச்சியல் நூறு குறட்பாக்கள்)

பேராசிரியர் சி. இலக்குவனார், எம்.ஏ.; எம்.ஓ.எல்.
தமிழ்த் துறைத் தலைவர்
இந்துக் கல்லூரி; நாகர்கோயில்

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

கிடைக்கும் இடம்
அருணா பப்ளிகேஷன்ஸ்
16-1, கோபாலகிருஷ்ண ஐயர் ரோடு,
தியாகராயநகர் :: சென்னை-17.

இரண்டாம் பதிப்பு: ஜூலை, 1956.

[உரிமை பதிப்பகத்தாருக்கு]

விலை ரூ. 1 - 4 - 0

அச்சிட்டது:
மன்றம் அச்சகம், 26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1

## முகவுரை

திருக்குறள் ஒரு சிறந்த வாழ்க்கை நூல். தமிழில் பிறந்தது; உலகத்துக்குரியது; சாதி, மதம், நிறம், மொழி, நாடு முதலிய வேற்றுமைகளைக் கடந்து நிற்பது. இத்தகைய நூலை மக்கள் வாழ்க்கையில் மருவுமாறு செய்ய வேண்டுவது பொதுமை விரும்புவோர் கடன்.

இந்நாளில் திருக்குறளுக்குப் புதுப் புது உரைகள் காணப்படுகின்றன. அவற்றுள் பொருந்தியன சிலவே. அச்சிலவற்றுள் ஒன்று தமிழ்ப் பேராசிரியர் "சி. இலக்குவனார்" உரை என்று கருதுகின்றேன். இவ்வுரையில் சில பகுதிகள் என் முன்னே படித்துக் காட்டப்பட்டன. அவை காலத்துக் குரியன என்று கண்டேன். மகிழ் வெய்தினேன்.

உரையாசிரியர் இலக்குவனார்க்கு எனது வாழ்த்து உரியதாக.

*இராயப்பேட்டை,*
*22—11—'49.*

திரு. வி. க.

# கருத்துரை

ஆளுக்கொருவிதமாக நேரத்திற்கொருவகையாகப் பேசியும், நடந்தும் வருகின்ற அமைச்சர்கள் மலிந்துள்ள இக்காலத்தில் இச்சிறு நூல் வெளிவந்தது மிகமிகப் பொருந்தும். "ஜனநாயகம்" என்ற பெயரால் இன்று எவரும் அமைச்சராகலாம். எனினும், அப்பதவிக்குரிய திறமையைப் பெற்றிராவிடில் என்னாகும்? விடை நம் கண்முன்பே காணும்படி நிற்கிறதே!

அமைச்சராயிருப்பவர் சொல்வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை, குறிப்பறிதல் ஆகிய பல பண்புகளை உடையராய் இருத்தல் அவசியம் என்பது வள்ளுவர் கருத்து. அதை நல்ல முறையில், இக்காலத்து எடுத்துக்காட்டுகளுடன் எளிய நடையில் தந்திருக்கிறார் இலக்குவனார். ஒவ்வொரு குறளுக்கும் பதவுரையும் சிறப்புரை என்னும் தெளிவுரையும் இந்நூலிற் காணலாம்.

அமைச்சராயிருப்போரும், வரவிருப்போரும்மட்டுமே இதைப் படித்தாற் போதாது. குறளாசிரியரும் விளக்கவுரையாசிரியரும் அமைச்சர்பற்றிக் கூறுவதென்ன என்பதை அறிய விரும்பும் குடிமக்களும் படித்துணர வேண்டும்.

குறள் இம்மாதிரித் தொகுக்கப்படுவது முற்றிலும் புதிய முறையேயாகும். இதுபோன்றே வேறு சில தலைப்புக்களிலும் தொகுத்துத் தந்து தமிழ்ப்பணி செய்ய வேண்டியது கல்வி கேள்விகளிற் சிறந்த இந்நூலாசிரியரின் கடன்; அவர் முயற்சியை ஆதரிக்க வேண்டியது தமிழர் கடன்.

சென்னை,
28—12—49.

—சா. குருசாமி
"விடுதலை" ஆசிரியர்

# முன்னுரை

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; நல்வாழ்வு வாழ்ந்து நல்லின்பம் துய்ப்பது எப்படி என்பதை எடுத்துக் காட்டுவது. வள்ளுவர் கூறும் வழியில் மாநில மக்கள் ஒழுகுவார்களேயானால், இவ்வுலகு இன்பத்தின் நிலைக்களனாய் இனிது விளங்கும். ஆனால், திருக்குறள் என்றால் இன்னது என்று அறியாதவர்கள் பலர்; அறிந்தோர் சிலருள், "திருக்குறள் ஒரு நீதி நூல், இக்காலத்திற்கு ஏலாது" என்று நினைப்போரும், "தமிழ்ப் புலவர்கள் கற்பதற்குரியது" என்று கருதுவோரும், "வாழ்க்கைக்கும் அதற்கும் தொடர்பு இராது" என்று மதிப்போரும் உளர். திருக்குறள் எப்பொருளை யார்க்கு அறிவிக்கின்றது என்பதை அதன் பெயரைக் கொண்டு அறிய முடியாது. திருக்குறள் என்ற பெயர் மக்களைத் தன்பாலிழுக்கும் ஆற்றல் பெற்றிலது. இப்பெயரும் இதற்குச் சிறப்பினைத் தருவதாகச் சொல்ல முடியாது. 'குறள்' என்பது பாட்டு வகைகளுள் ஒன்று. குறுகிய அடிகளையுடைய வெண்பா ஆகும். குறள் வெண்பாவினால் ஆக்கப்பட்டுள்ளதால் 'குறள்' என்று அழைத்து விட்டனர். இப்பெயரும் இடைக் காலத்தில் வந்துள்ளதாகவே தெரிகின்றது. பண்டை நாளில் 'அறம்' என்றும் 'பொருளுரை' என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் 'தமிழ் மறை' என்று அழைக்கப்படுகின்றது.

திருக்குறள், தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெறாமல்போனதற்குரிய காரணங்களுள் ஒன்று அதற்கு எழுதப்பட்ட உரையாகும். திருக்குறளுக்குப் பல உரைகள் உள. அவற்றுள் கற்றோரால் விரும்பப்படுவது பரிமேலழகர் உரையே. பரிமேலழகர் உரை மிகவும்

சிறந்ததுதான். ஆனால் அவ்வுரை, குறட்பாவினும் கடினமாகி விட்டது. திருக்குறளைப் புரிந்து கொள்வோர் அதன் உரையைப் புரிந்துகொள்ள மாட்டார். பரிமேலழகரைக் குறை கூறுதல் கூடாது. அவர் கற்றவர்க்கே எழுதினார். பொது மக்களுக்காக எழுதவில்லை.

மக்கள் அரசியல் அறிவு பெறுதல் வேண்டும். உரிமையோடு எதையும் செய்தல் வேண்டும். வறுமையிலும் அறியாமையிலும் ஆழ்ந்துள்ள மக்கள் எதையும் உரிமையோடு செய்வதற்கு உரன்பெறார். அறியாமை நீங்கினால் வறுமை நீங்கும்; "அறிவுடையார் எல்லாம் உடையார்"; அறிவுடையோர் ஆறு அரசு செல்லும், அவ்வரசில்தான் மக்கள் உரிமையும் இன்பமும் பெறுதல் கூடும்.

நாட்டு மக்களில் கல்வி கற்றுள்ளோர் நூற்றுக்குப் பதினைவர் என்று கூறுகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆரியமும், இருநூறு ஆண்டுகளாக ஆங்கிலமும் செல்வாக்குப் பெற்றுத் தமிழ்மக்கள் தமிழ்க் கல்வியைப் பெறும் வாய்ப்பை அழித்துவிட்டன. தாய்மொழிக் கல்வி எளிதில் பெறக்கூடியது. எளிதில் பெறுவதை இழந்தனர். அரிதில் பெறக்கூடிய அயல்மொழிக் கல்விக்கு ஆர்வம் காட்டினர். பெற்றவர் சிலராகவும் பெறாதவர் பலராகவும் ஆயினர்.

அயல் மொழிக் கல்விகற்றோர் அரும் தமிழ் நூல்களை மறந்தனர். தமிழில் என்ன உண்டு? என்று இகழ்ந்தனர். மேனாட்டு அரசியல் அறிஞர்களைப்பற்றி அழகாகப் பேசினர். தமிழ்நாட்டு அரசியல் அறிஞராம் வள்ளுவரைப்பற்றி எதுவும் அறிந்திலர். வள்ளுவர் பெருமான் பெரும் புலவர் மட்டுமன்று; சிறந்த அரசியல் அறிஞருமாவார். "அரசியல் என்பது, நெறி தவறிச் செல்வோரின் கடைசிப் புகலிடம்" என்று மேனாட்டறிஞர்



ஒருவர் கூறினார். ஆனால் வள்ளுவர்பெருமான், அரசியலை வாழ்வின் ஒரு கூறாக வைத்து மக்களனைவரும் தொண்டாற்றுதற்குரிய நெறிமுறையாக அமைத்தார். அரசியலில் அமைச்சியல் ஒரு பகுதி. அமைச்சராவார் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை அழகுற விளக்குவது.

'குடியரசு' என்பது மக்கள் நன்மையை நாடி மக்களால் நடத்தப்படும் ஆட்சியாகும். நாட்டு மக்கள், கல்வியறிவில் சிறந்து, ஒழுக்கத்தில் உயர்ந்து, பிறர்க்கென வாழ்வதில் பெருவிருப்பம் உடையவர்களாக இருந்தால்தான், குடியரசு மக்களுக்கு நன்மை பயப்பதாகும். இல்லையேல் குடியரசின் பெயரால் கொடுங்கோன்மைதான் செல்வாக்குப்பெற்று விளங்கும்.

மக்களாட்சி முறையில் அமைச்சர் குழுவே ஆளும் பொறுப்பிற்குரியதாகின்றது. குடியரசில் தலைவர் ஒருவர் உண்டு என்றாலும் தலைவரும் அமைச்சர்கள் அமைக்கும் வழியில்தான் செல்வதற்குரியர்.

திருக்குறள் பொதுமக்களிடையே செல்வாக்குப் பெறுதல் வேண்டும், அனைவரும் விரும்பிக் கற்றல்வேண்டும். முழு நூலுக்கும் உரை எழுதி வெளியிடுவதைவிடச் சிறுசிறு பகுதிகளாக வெளியிடுதல் எல்லோரும் எளிதிற் பெற்றுப் பயன் பெறுதற்குத் துணைபுரியும் அன்றோ. ஆதலின் வள்ளுவர் உணர்த்தும் பொருளை அடிப்படையாக வைத்து, மக்களைத் தன்பால் ஈர்க்கும் வகையில் தலைப்புக்கள் கொடுத்து வெளியிட எண்ணினேம். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் அறம், பொருள், இன்பம் என்ற முப்பெரும் பிரிவுகளையும் **1. அமைச்சர் யார்? 2. எல்லோரும் இந்நாட்டு மன்னர் 3. குடிமைப் பயிற்சி 4. காதலர் வாழ்வு 5. உண்மைத் தொண்டன் யார்?** என்ற ஐந்து பிரிவுகளாக்கிச் சொல்லுக்குச் சொல் தெளி

பொருளும் விளக்கவுரையும் எழுதி வெளியிட எண்ணினோம். இவ்வரிசையில் "அமைச்சர் யார்?" என்பது முதல் முதலாக வெளிவருகின்றது.

'அமைச்சியல்' பகுதியில் கூறப்பட்டுள்ள பத்து இயல்புகளும் இதனுள் அடங்கியுள்ளன. இயல்பு வைப்பு முறையில், பரிமேலழகர் உரை நூலோடு சிறிது மாறுபட வைத்துள்ளோம். பரிமேலழகர் உரை நூலில், 1. அமைச்சு, 2. சொல்வன்மை, 3. வினைத்தூய்மை, 4. வினைத்திட்பம், 5. வினைசெயல்வகை, 6. தூது, 7. மன்னரைச்சேர்ந்தொழுகல், 8. குறிப்பறிதல், 9. அவையறிதல், 10. அவையஞ்சாமை என்ற முறையில் வைக்கப்பட்டுள்ளன. இம்முறைவைப்பு அவ்வளவு பொருட்பொருத்தமுற அமைந்துள்ளதாகத் தோன்றவில்லை. ஆதலின், அம்முறையை மாற்றி, 1. அமைச்சு, 2. சொல்வன்மை, 3. அவையறிதல், 4. அவையஞ்சாமை, 5. குறிப்பறிதல், 6. வினைத் தூய்மை, 7. வினைத் திட்பம், 8. வினை செயல் வகை, 9. தூது, 10. மன்னரைச் சேர்ந்தொழுகல் என்ற முறையில் வைக்கப்பட்டுள்ளன. அமைச்சராவார் சொல்வன்மை பெற்றிருத்தல் வேண்டும். சொல்வன்மையுடையார்க்கு அவையை அறிதலும் அவையஞ்சாமையும் குறிப்பறிதலும் இன்றியமையாதன. அமைச்சரான பின்னர் வினைத் தூய்மையும், வினைத் திட்பமும், வினை செயல் வகையும் இன்றியமையாதன. அமைச்சருக்குள்ள தகுதியுடையோரே தூதுவராதற்கு உரியவர். இன்றைய அரசியலில் முதன்மைத்தூதுவர்கள் அமைச்சர் வரிசையினைப் பெறுகின்றமையையும் இம்முறைவைப்போடு ஒப்பிட்டு ஆராய்வதற்குரியது. 'மன்னரைச் சேர்ந்தொழுகல்' இக்காலத்திற்கு வேண்டியதின்று. ஆயினும் இவ்வியலில் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் தலைவருடன் அமைச்சரும் அமைச்சருடன் செயலாளரும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்



என்பதை விளக்குகின்றன; ஆகையால், இவ்வியல் இறுதியில் வைக்கப்பட்டுள்ளது.

சில இயல்களில் குறட்பாக்கள் வைப்பு முறையும் மாற்றப்பட்டுள்ளது.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களை இந்நூலுக்கு முகவுரை ஒன்று எழுதித்தருமாறு வேண்டினோம். அவர்கள் உடல் நலமற்று மெலிந்து கண்ணொளி மழுங்கிப் படுக்கையிலிருந்தாலும் தமக்கியல்பாயுள்ள அன்புப்பெருக்கால் சில வரிகள் எழுதியளித்தனர். அவர்கட்கு எம் உளமார்ந்த நன்றி உரியதாகுக.

திருக்குறளைச் செந்தமிழ் நாடெங்கணும் பரப்பி, "உனது மதம் என்ன என்று கேட்டால் வள்ளுவர் மதம் என்று கூறு" என்று பெருமுழக்கம் செய்துவரும் பெரியார் அவர்கட்கு இந்நூலை உரிமையாக்கியுள்ளோம். எம் அன்பின் காணிக்கையை ஏற்றுக்கொண்ட பெருந்தகைமைக்கு எம் பெருநன்றியுரியதாகுக. "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி".

—சி. இலக்குவன்.

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | அமைச்சு | ... | 1 |
| 2. | சொல்வன்மை | ... | 13 |
| 3. | அவையறிதல் | ... | 22 |
| 4. | அவையஞ்சாமை | ... | 32 |
| 5. | குறிப்பறிதல் | ... | 40 |
| 6. | வினைத்தூய்மை | ... | 49 |
| 7. | வினைத்திட்பம் | ... | 58 |
| 8. | வினைசெயல்வகை | ... | 67 |
| 9. | தூது | ... | 78 |
| 10. | மன்னரைச் சேர்ந்தொழுகல். | | 87 |


# 1. அமைச்சு

முடிசூடிய மன்னன், குடிமக்கள் கருத்தைத் தழுவியோ தழுவாமலோ ஆண்ட காலத்தில் அமைச்சர்களே ஆட்சிக்குப் பொறுப்பாயிருந்தனர். குடிமக்களால் தேர்ந்தெடுக்கபபடுகின்ற தலைவர்கள் ஆளுகின்ற இக்காலத்திலும் அமைச்சர்களே ஆட்சி செலுத்துகின்றனர். இக்கால ஆட்சி முறைகளில் தலைவர், அமைச்சர் குழு, சட்ட மன்றங்கள் இருப்பதைக் காண்கின்றோம். இங்கிலாந்தில் தலைவருக்குப் பதிலாக, காட்டிய இடத்தில் கையெழுத்திடும் காவலர் (அரசர்) இருக்கின்றார். ஆயினும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து அமைத்துக்கொள்ளப்பட்ட அமைச்சர் குழுவே ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றது. நம் நாட்டு ஆட்சிமுறை இப்பொழுது உருவாக்கப்பட்டு விட்டது. இங்கும் தலைவர் உள்ளனர்; அமைச்சர் குழுவும் உண்டு; சட்ட மன்றங்களும் உள்ளன. அமைச்சர் குழுவின் திறத்தைப்பொறுத்ததே ஆட்சிச்சிறப்பு. ஆதலின், அமைச்சர்களாய் இருப்போரும், வரவிரும்புவோரும், அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்போரும் அமைச்சர்கள் எப்படி இருத்தல் வேண்டும் என்று தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாதது.

நம் தமிழ் நாட்டு அரசியல் அறிஞர் வள்ளுவர் பெருமான், அமைச்சர்களைப் பற்றிப் பத்து இயல்களில் (100-குறட்பாக்களில்) கூறுகின்றார். அவற்றை அறிந்து கொள்வது மிகவும் பயன்தரும். முதற்கண் ‘அமைச்சு’